ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2025.12.01 |


# கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2025 நவெம்பரில் மாற்றமின்றிக் காணப்பட்டது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (கொநுவிசு, 2021=100)[1] அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு), தொடர்ச்சியாக எட்டு மாதங்களாக உயர்வடைந்ததன் பின்னர், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2025 நவெம்பரில் 2.1 சதவீதமாக மாற்றமின்றி காணப்பட்டது.

உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2025 ஒத்தோபரில் பதிவாகிய 3.5 சதவீதத்திலிருந்து 2025 நவெம்பரில் 3.0 சதவீதத்திற்கு குறைவடைந்த அதேவேளை உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2025 ஒத்தோபரில் பதிவாகிய 1.4 சதவீதத்திலிருந்து 2025 நவெம்பரில் 1.7 சதவீதமாக அதிகரித்தது.

மாதத்திற்கு மாதம் அடிப்படையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2025 நவெம்பரில் 0.23 சதவீதத்தினால் குறைவடைந்தது. இதற்கு, உணவு வகைகள் -0.18 சதவீதப் புள்ளிகளினால் பங்களித்ததுடன் உணவல்லா வகை -0.05 சதவீதப் புள்ளிகளால் பங்களித்தது. அதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கப் போக்குகளைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2025 ஒத்தோபரின் 2.2 சதவீதத்திலிருந்து 2025 நவெம்பரில் 2.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

| பணவீக்கம் கொநுவிசு (2021=100) | 2025 ஒத்தோபர் | 2025 நவெம்பர் |
|---|---|---|
| சுட்டெண் பெறுமதி | 193.8 | 193.4 |
| மாதாந்த மாற்றம் (%) | 0.1 | -0.2 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 2.1 | 2.1 |

**கொநுவிசு அடிப்படையிலான பணவீக்கத்தின் அசைவு (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்)**




பொருத்தமான கொள்கைகளின்[2] ஆதரவுடன் எதிர்வரும் காலப்பகுதியில் பணவீக்கத்தின் படிப்படியான அதிகரிப்பு 5 சதவீதம் கொண்ட இலக்கினை நோக்கிச்சென்று அதன் பின்னர் நிலையுறுதியடையுமென 2025 நவெம்பரின் நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட பணவீக்க எறிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்[அ]**

**கொநுவிசு[ஆ], காலாண்டுச் சராசரி, ஆண்டிற்கு ஆண்டு, %**

**2025 நவெம்பர் நாணயக் கொள்கைச் சுற்றின் போதான எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது**




அ/ 2025 நவெம்பர் மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. இவ்வெறிவுகள், அண்மைய புயல் தொடர்பான அனர்த்தங்களுக்கு முன்னர் எறிவுசெய்யப்பட்டமையினால், அவற்றின் தாக்கம் இன்னமும் இவ்வெறிவுகளில் கூட்டிணைக்கப்படவில்லை. இங்கே காட்டப்பட்டுள்ள பணவீக்க வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப் பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினைத் தெளிவுபடுத்துகின்றது.

ஆ/ வீச்சு வரைபடத்திலுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் சகல கிடைக்கப்பெறுகின்ற தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

***மூலம்:*** மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

*§ 2023 ஒத்தோபரில் இலங்கை மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட நாணயக்கொள்கை கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கு (5%) இணங்கிக்கொள்ளப்பட்டது.*

---

1 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (கொநுவிசு, 2021=100) கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேசங்களிலுள்ள வீட்டலகுகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை குறித்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

2 எனினும், புயலின் முழு தாக்கமும் இன்னும் மதிப்பிடப்பட்டு வருகின்றதுடன் மத்திய வங்கியின் பணவீக்க எறிவுகளில் இன்னும் இணைக்கப்படவில்லை என்பதால், அண்மைய புயலுடன் தொடர்புடைய இடையூறுகளின் தாக்கம் காரணமாக எதிர்பார்க்கப்படும் பாதை சாத்தியமான விலை மாற்றங்களால் மாற்றப்படலாம்.

**துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்) அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (2021=100)**




**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவு (2021=100)**

| காலம் | | சுட்டெண் எண்ணிக்கை | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டிற்கான சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) |
| 2024 | நவெம்பர் | 189.4 | 177.1 | -0.3 | -0.2 | -2.1 | 2.7 | 1.7 | 3.1 |
| | திசெம்பர் | 191.7 | 177.1 | 1.2 | 0.0 | -1.7 | 2.7 | 1.2 | 3.3 |
| 2025 | சனவரி | 192.6 | 178.4 | 0.5 | 0.7 | -4.0 | 1.2 | 0.4 | 3.2 |
| | பெப்புருவரி | 192.2 | 178.5 | -0.2 | 0.1 | -4.2 | 0.7 | -0.5 | 3.0 |
| | மாச்சு | 191.6 | 178.6 | -0.3 | 0.1 | -2.6 | 0.7 | -0.8 | 2.8 |
| | ஏப்பிறல் | 191.2 | 178.8 | -0.2 | 0.1 | -2.0 | 0.8 | -1.1 | 2.6 |
| | மே | 192.8 | 179.2 | 0.8 | 0.2 | -0.7 | 1.2 | -1.2 | 2.4 |
| | யூன் | 194.5 | 180.1 | 0.9 | 0.5 | -0.6 | 1.5 | -1.4 | 2.1 |
| | யூலை | 194.1 | 180.8 | -0.2 | 0.4 | -0.3 | 1.6 | -1.6 | 1.9 |
| | ஓகத்து | 193.3 | 180.9 | -0.4 | 0.1 | 1.2 | 2.0 | -1.5 | 1.8 |
| | செத்தெம்பர் | 193.7 | 181.2 | 0.2 | 0.2 | 1.5 | 2.0 | -1.4 | 1.7 |
| | ஒத்தோபர் | 193.8 | 181.4 | 0.1 | 0.1 | 2.1 | 2.2 | -1.2 | 1.6 |
| | நவெம்பர் | 193.4 | 181.3 | -0.2 | -0.1 | 2.1 | 2.4 | -0.8 | 1.6 |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

குறிப்பு: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கமைவாக, ஆண்டுக்கு ஆண்டுப் பணவீக்கமும் மாதாந்த மாற்றமும் முழுத்தானமாக்கப்பட்ட சுட்டெண் இலக்கங்களைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டன.